[28th August 1970

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டெல்லியிலிருந்து என்ன பதில் வருகிறது என்று நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இப்போதுள்ள தேசியக் கொடியைக்கூட டெல்லி நாடாளுமன்றத்தில் மறைந்த முன்னாள் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஒரு தீர்மானமாகக் கொண்டுவந்த பிறகுதான், அது '-ஆக்ட்'' ஆக உருவாக்கப்பட்டது. ஆகவே நாமும் நம்முடைய மாநிலத்திற்கு என்று தனிக் கொடி உருவாக்கும்போது, கட்டாயம் மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல், அதற்கான விதி முறையை வகுத்துக் கொள்ளலாம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கொடியின் உபயோகத்தைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநில அளவில் திறப்பு விழாக்கள், அதாவது கட்டிடத் திறப்பு விழாக்கள் போன்றவை இருக்கின்றன. அத்தகைய மாநில விழாக்கள் நடத்தும்போது, இந்தக் கொடியும் உபயோகப்படுத்தப்படுமா என்பதுபற்றி விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசியக் கொடிக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் பிரதமர் அவர்கள் சொன்னார்கள் என்று குறிப்பிட்டேன். அரசியலமைப்புக் குழுவில் தான் பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் நம்முடைய தேசியக் கொடிக்கு என்ன விதி முறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதைப் போலவே மாநிலக் கொடிக்கும் இறுதி முடிவெடுக்கும்போது, எல்லோரையும் கலந்து ஆலோசித்து ஏற்படுத்திக் கொள்ளலாம்.

Deputy Superintendent of Police, Ramanathapuram

*31. Q.—THIRU SAW GANESAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any complaint was made to the superior officers of the Police Department about the Deputy Superintendent of Police, Ramanathapuram, Ramanathapuram district during May, 1970 ; and

(*b*) the action taken on the petition given to the superior officers of the Police Department complaining that he has been taking a partial attitude and threatening the trustees of the Hindu Temple at Alagankulam to vacate the temple lands ?

இராமநாதபுரத்தில் உள்ள போலீஸ் உதவிக் கணகாணிப்பாளர்

திரு. சா. கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் உள்ள போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் (Deputy Superintendent of Police) மீது 1970-ஆம் வருடம் மே மாதத்தில் காவல் துறை மேலதிகாரி களிடத்தில் புகார் ஏதேனும் செய்யப்பட்டதா ?

(இ) அவர் ஒரு தலைச் சார்பாக இருந்து கொண்டு அழகன்குளம் ஹிந்துக் கோயில் இடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று அதன் தர்மகர்த்தாக்களை அச்சுறுத்தி வருவது பற்றி போலீஸ் மேலதிகாரி கட்குக் கொடுக்கப்பட்ட மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

28th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : இது மாதிரி ஒரு புகார் 1970-ம் ஆண்டு மே மாதத்தில் காவல்துறை மேல் அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டு அதற்குரிய அக்னலட்ஜ்மெண்டையும் இது சம்பந்தப்பட்டவர்கள் என்னிடத்தில் கொண்டுவந்து காட்டினார்கள். ஆகவே, இது சம்பந்தமாக இனி யாவது அப்படி ஒரு புகார் வந்ததா ? வந்ததன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அரசு விசாரித்து, அதன் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ராமனாதபுரம் வட்டம் அழகன்குளம் பஞ்சாயத்திற்குச் சொந்தமான 30 சென்ட் நத்தம் புறம்போக்கு நிலத்தில் அழகன்குளம் கோயில் நிர்வாகத்தினர் வேலி போட்டு வைத்திருந்தார்கள் என்பதால், அதுபற்றி ஆர்.டி.ஓ.வுக்கு முறையிட்டு, அந்த 30 சென்ட் நிலத்திலிருந்து அவர்கள் காலி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பஞ்சாயத்துத் தலைவரும் உறுப்பினர்களும் ஒரு முறையீடு செய்து, அதன்படி ஆர்.டி.ஓ. விசாரணை செய்து, அந்த இடத்தைக் காலி செய்ய நடவடிக்கை எடுத்தார் என்றும், அப்போது அசம்பாவிதம் எதுவும் ஏற்படலாம் என்று நினைத்ததன்பேரில், போலீஸ் உதவி கோரப்பட்டது என்றும், பஞ்சாயத்துத் தலைவர் உதவி கோரியதன் காரணமாக, அங்கே போலீஸ் உதவி தரப்பட்டது என்ற தகவல் வந்திருப்பதாகப் போலீஸ் தலைமை அதிகாரி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. டி. சந்தோஷம் : தலைவர் அவர்களே, இந்த இடத்தைப் பொறுத்த வரையில், செட்டில்மெண்ட் அதிகாரி அவர்களும் ரெவின்யூ போர்டு அதிகாரிகளும் இதில் இறுதித் தீர்ப்பு கூறிவிட்டார்கள். அதன் பிறகு, இந்த வேலி போடப்பட்டது. அதில் கலெக்டர் அவர்களும் ஆர்.டி.ஓ. அவர்களும் தலையிட்டு அந்த வேலியை எடுக்க வேண்டுமென்று தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். இப்போது அந்த வேலி அப்படியே இருக்கிறதா அல்லது எடுக்கப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : என்னிடத்தில் தரப்பட்டுள்ள முதன்மைக் கேள்வியில் அங்கே போலீஸ் அதிகாரி மீது புகார் செய்யப்பட்டதா என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வேலி அகற்றப்பட்டுவிட்டதா இல்லையா, இப்போது என்ன நிலையில் இருக்கிறது என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : இந்த இடம் அந்த இந்துக் கோயில்காரர்களுக்குச் சொந்தம் என்பதற்கு சென்னை சர்க்கார் மூலமாகவும் பஞ்சாயத்து மூலமாகவும் இப்போதுள்ள தாவாவிற்கு உட்பட்ட 5 சென்ட் இடத்தை இந்தக் கோயில்காரர்களிடத்தில் வாட்டர் டாங்க் கட்டகிரயத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறதா என்பதை அரசு அறியுமா ?

[28th August 1970

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதையும் முதன்மைக் கேள்வியுடன் இணைத்துக் கேட்டிருந்தால் அதுபற்றிய விவரங்களைத் திரட்டித் தந்திருக்க முடியும். ஆனால் முதன்மைக் கேள்வி வேறு. இப்போது கேட்கும் கேள்வி வேறு.

All India Radio, Madras.

4–20 p.m. *32. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government are aware that while making announcements from All India Radio Station at Madras, they make use of the words "Akashvani, All India Radio, Madras"; and

(*b*) whether arrangements will be made to make use of the words "All India Radio, Chennai"?

சென்னை வானொலி நிலையம்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை வானொலி நிலையத்தில் இருந்து ஒலிபரப்பு அறிவிக்கும்போது ''ஆகாஷ்வாணியின் மதராஸ் வானொலி நிலையம் என'' அறிவிக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(இ) அதை மாற்றி ''சென்னை வானொலி நிலையம்'' என ஒலி பரப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். அரசு அறியும்.

(இ) இது குறித்து மத்திய அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியிருப்பதாகக் கூறினார்கள். அவர்களிடமிருந்து பதில் கிடைத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. மு.கருணாநிதி : இதுபற்றி 3–3–70-ல் மத்திய ஒலிபரப்பு அமைச்சர் திரு. சத்தியநாராயண சின்ஹா அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டது. 10–3–70-ல் அவர்கள் அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டதற்கான குறிப்பு அங்கிருந்து வந்தது. பிறகு அதை நினைவுபடுத்தி அந்த இலாகாவுக்கு ஒரு கடிதம் இங்கிருந்து எழுதப்பட்டது. இதுவரையில் ஒப்புதல் கடிதம் எதுவும் அங்கிருந்து வரவில்லை.